# JESUS 316

# இயேசு யார்?

**இயேசு யார்?** இந்தக் கேள்விக்கான ஒரே மெய்யான பதிலை வேதாகமம் கொடுக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல், *"வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது"* 2 தீமோத்தேயு 3:16 என்று எழுதினார். இயேசு கடந்தகால நித்தியம் முதல் எதிர்கால நித்தியம் வரை தேவனாக இருக்கிறார் என்று ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரை தேவ ஆவியினால் அருளப்பட்ட வேதாகமம் போதிக்கிறது. அவரே, *"இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தர்: அவர் அல்பாவும், ஓமெகாவுமாக இருக்கிறார்"* என்று வெளிப்படுத்தின விசேஷம் 1:8-ல் வேதாகமம் அறிவிக்கிறது. தேவன், சிருஷ்டிகர், பிரதான மேய்ப்பர், கர்த்தர், மீட்பர், தேவ ஆட்டுக்குட்டி, கர்த்தாதி கர்த்தர், ராஜாதி ராஜா, இம்மானுவேல் (தேவன் நம்மோடிருக்கிறார்), இரட்சகர், பிரதான ஆசாரியர், உயிர்த்தெழுதல் மற்றும் ஜீவன் என்று வேதாகமம் இயேசுவை அடையாளம் காண்பிக்கிறது.

**இயேசு சிருஷ்டிகராக இருந்தவர்.** *"ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று. அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது."* யோவான் 1:1–14. *"அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது" கொலோசெயர் 1:16–17 வசனப் பகுதிகள்.*

**இயேசு இருக்கிறவராக இருக்கிறவர்.** கர்த்தருடைய தூதனானவராகிய இயேசு யாத்திராகமம் 3-ஆம் அதிகாரத்தில் (~கி.மு.1450), எரிகிற முட்செடியிலிருந்து மோசேயை அழைத்து, தம்மை "இருக்கிறவராக இருக்கிறவர்" என்று அறிமுகப்படுத்தினார். யோவான் 8-ஆம் அதிகாரத்தில், தாம் ஆபிரகாமுக்கும் (~கி.மு.2100), யூத ஜனங்களுக்கும் முன்பே "இருக்கிறவராக இருந்தவர்" என்று இயேசு தம்மைப் பற்றி அறிவித்தார். அவர் தம்மை தேவன் என்று சொல்லிக் கொள்கிறார் என்பதைக் கண்ட யூதர்கள் அவரைக் கல்லெறிந்து கொல்ல முற்பட்டார்கள். *"நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்,"* யோவான் 10:30–31, என்றும் இயேசு குறிப்பிட்டார்.

**இயேசு பழைய ஏற்பாட்டில் இருக்கிறார்.** ஒருவரும் பிதாவாகிய தேவனைக் கண்டதில்லை, யோவான் 1:18, 6:46. இருப்பினும், இயேசு பெத்லகேமில் பிறப்பதற்கு முன்னர், பழைய ஏற்பாட்டுக் காலத்தில், மனுவுருவாவதற்கு முன்பிருந்த இயேசுவாக, தேவன் பலருக்கு முன்பாகத் தோன்றினார். ஆதியாகமம் 16 & 21 அதிகாரங்களில், ஆகாருக்கும், யாத்திராகமம் 3-ல், மோசேக்கும், நியாயாதிபதிகள் 6-ல் கிதியோனுக்கும், நியாயாதிபதிகள் 13-ல் சிம்சோனின் பெற்றோருக்கும் கர்த்தருடைய தூதனானவராக தரிசனமானார். அதோடு, இயேசு ஆதியாகமம் 18 & 22-ல் ஆபிரகாமுக்கும், ஆதியாகமம் 31 & 32-ல் யாக்கோபுக்கும் தரிசனமானார். (சுமார் கி.மு 700-ல் எழுதப்பட்ட) ஏசாயா 48:12–19-ல், இயேசு திரித்துவத்தில் ஒருவராகக் குறிப்பிடப்படுகிறார்

**இயேசு முன்னுரைக்கப்பட்டவர்.** 300-க்கும் மேற்பட்ட பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள் இயேசுவின் பிறப்பு, வாழ்க்கை மற்றும் மரணத்தை நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே அறிவித்தன. (கல்லெறிந்து கொல்லுதல் மரண தண்டனையாக இருந்த காலமான சுமார் கி.மு.1000-ல் எழுதப்பட்ட) சங்கீதம் 22-ல் உள்ள சில தீர்க்கதரிசனங்கள் அவருடைய கொடூரமான சிலுவைப்பாடுகளை விவரிக்கின்றன. சங்கீதம் 22-ல் எழுதப்பட்ட தீர்க்கதரிசனங்களின் நிறைவேறல் மத்தேயு 27-ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**இயேசு தேவனும்-மனிதனும் ஆனார்.** *"நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்"* ஏசாயா 9:6, என்று ஏசாயா தீர்க்கதரிசி தீர்க்கதரிசனம் உரைத்தார். அவரே வல்லமையுள்ள தேவன் என்று ஏசாயா அடையாளம் காண்பித்தார். நித்திய குமாரனாக இருந்தவர் பெத்லகேமில் பிறந்த ஒரு குழந்தையாகக் கொடுக்கப்பட்டார். இயேசு கடந்தகால நித்தியத்தில் இருந்தே – தாம் மனிதனாகப் பிறப்பதற்கு முன்னமே – இருந்தவர். "தேவகுமாரன்" என்னும் தலைப்பு அவருடைய பிறப்பையல்ல, அவருடைய நிலையையே விவரிக்கிறது. அதனால், இயேசு பெத்லகேமில் பிறந்தபோதுதான் தோன்றினார் என்று அர்த்தமல்ல. *"கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்"* பிலிப்பியர் 2:5–8, என்று அப்போஸ்தலனாகிய பவுல் எழுதியுள்ளார். தேவனாக இருக்கும்போதே இயேசு முற்றிலும் மனிதனாக வந்தார். நித்தியமாக, எப்போதும் இருந்த இயேசு மனிதனாக மாற, பரலோகத்திலிருந்து இறங்கி வந்தார், யோவான் 3:13, 31, யோவான் 6:33–38. இயேசு ஒரே நேரத்தில் தேவனாகவும், மனிதனாகவும் இருந்தார்.

**இயேசு அற்புதங்கள் செய்தார்.** அவர் செய்த பெரும்பாலான அற்புதங்கள் புதிய ஏற்பாட்டில் காணப்படுகின்றன. அவற்றுள் மூன்று அற்புதங்கள் தத்ரூபமாக அவரைப் பற்றி சாட்சி பகருகின்றன. அற்புதவிதமாக 5000 பேரை போஷித்த பின் அவர், *"ஜீவ அப்பம் நானே"* யோவான் 6:35, என்று கூறினார். *"நான் உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்"* யோவான் 9:1–8, என்று சொல்லி, ஒரு குருடனுக்குப் பார்வையளித்தார். அதோடு, *"நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்"* யோவான் 11:25, என்றும் கூறினார். மரித்து நான்கு நாட்கள் ஆகியிருந்த தன் நண்பன் லாசருவின் கல்லறைக்குச் சென்ற இயேசு, உயிருடன் எழுந்து வரும்படி அவனை அழைத்தார். இயேசு வியாதிப்பட்டவர்களையும், முடவர்களையும், செவிடர்களையும், ஊமையர்களையும், குஷ்டரோகிகளையும், பிசாசு பிடித்தவர்களையும் சுகமாக்கினார். தண்ணீரை திராட்சை ரசமாக மாற்றினார், கடல் மேல் நடந்தார், கடலை அமைதிப்படுத்தினார். திமிர்வாதக்காரன் ஒருவனை இயேசுவிடம் அழைத்து வந்தவர்களைப் பற்றி மத்தேயு 9:2–7 பேசுகிறது.

அவர் அவனிடம், *"மகனே, திடன்கொள், உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது"* என்றார். தேவன் மட்டுமே பாவங்களை மன்னிக்க முடியும் என்பதால், மதத்தலைவர்கள் இயேசு தூஷணம் பேசுகிறார் என்று நினைத்தார்கள். *"உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று சொல்வதோ, எழுந்து நடவென்று சொல்வதோ, எது எளிது? பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும் என்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி: நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்றார். உடனே அவன் எழுந்து, தன் வீட்டுக்குப் போனான்."*

**இயேசு தாம் தேவனாக இருப்பதை நிரூபித்தார்.** இயேசு தம் பிறப்பும் வாழ்க்கை மற்றும் மரணம் பற்றிய பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றினார். தாம் தேவன் என்பதை வெளிப்படுத்த அவர் பல அற்புதங்களைச் செய்தார். அதிகாரத்துடன் போதித்தார். *"இயேசு இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்தபோது, அவர் வேதபாரகரைப்போல் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியால், ஜனங்கள் அவருடைய போதகத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள்"* மத்தேயு 7:28–29. அவர் பாவமற்றவராக வாழ்ந்தார், எபிரெயர் 4:15, 1 பேதுரு 2:22, 1 யோவான் 3:5. பாவமற்ற தேவ-மனிதராகிய இயேசு, நம் பாவங்களுக்காக சிலுவையில் பலியான பரிபூரணமான தேவ ஆட்டுக்குட்டியாக மாறினார். *"நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்"* 1 பேதுரு 2:24.

**இயேசு சிலுவையிலறையப்பட்டு, மரித்து, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார்.** *"உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே"* 1 பேதுரு 1:18–19. *"அவரை மரத்திலே தூக்கிக் கொலைசெய்தார்கள். மூன்றாம் நாளிலே தேவன் அவரை எழுப்பிப் பிரத்தியட்சமாய்க் காணும்படி செய்தார். அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக்குறித்தே சாட்சிகொடுக்கிறார்கள்"* அப்போஸ்தலர் 10:39–40, 43. *"நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்து,"* 1 கொரிந்தியர் 15:3–4. கல்லறையிலிருந்து உயிரோடு எழுந்த இயேசு பரலோகத்திற்கு ஏறிச் செல்வதற்கு முன் பலருக்கு நேரடியாக தரிசனமானார்.

**இயேசுவே தேவனிடம் செல்வதற்கான ஒரே வழி.** இயேசு, *"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்"* யோவான் 14:6, என்றார். *"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை"* அப்போஸ்தலர் 4:12, என்றார் பேதுரு. அப்போஸ்தலனாகிய பவுல், *"தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே; இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது"* 1 தீமோத்தேயு 2:5–6, என்று எழுதினார். தேவனிடம் செல்வதற்கான இயேசுவின் வழி மற்ற மதங்களிலிருந்து மாறுபட்டது. அவை நம் பாவப் பிரச்சனைக்கு எவ்விதத் தீர்வும் அளிப்பதில்லை. பொதுவாக, நன்மை, தீமைக்கு அவர்கள் கொடுத்திருக்கும் பல்வேறு வரையறைகளின்படி நீங்கள் நன்மை செய்தால், அவர்களுடைய தெய்வங்கள் உங்கள் பாவங்களை கண்டுகொள்ளாமல் பரலோகத்தில் உங்களை அனுமதிப்பார்கள் என்று போதிக்கிறார்கள். இயேசுவின் வழியோ, அவரை விசுவாசிப்பதன் மூலம் உங்கள் பாவங்களுக்கான நிவாரணம் சிலுவையில் செலுத்தப்பட்டு, நீங்கள் மன்னிக்கப்படுகிறீர்கள். இயேசுவோடு நீங்கள் மன்னிக்கப்பட்டவர்களாக பரலோகம் செல்வீர்கள். *"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்"* யோவான் 3:16.

**இயேசு மீண்டும் வருவார்.** *"என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்"* யோவான் 14:2–3, என்றார் இயேசு. வேதாகமத்தின் இறுதி வார்த்தைகளில், மீண்டும் இயேசு, *"மெய்யாகவே நான் சீக்கிரமாய் [திடீரென] வருகிறேன்"* என்கிறார். அப்போஸ்தலனாகிய யோவான், *"ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்"* என்று அதனுடன் சேர்த்துக் கொண்டார், வெளிப்படுத்தின விசேஷம் 22:20–21. இயேசு இன்றே வருவார் என்றால், அவரை சந்திக்க நீங்கள் ஆயத்தமா? இயேசுவை விசுவாசித்து, தேவனால் மன்னிக்கப்பட்டு, ஆயத்தமாக இருக்க, www.Gospel316.org என்ற வலைதளத்தை அணுகுங்கள்.

**இயேசு கடந்தகால நித்தியம் முதல் எதிர்கால நித்தியம் வரை எப்போதும் தேவனாக இருக்கிறார்.**

**அவருடைய நாமத்தை சொல்லும்போது வியத்தகு ஆச்சரியத்தில் ஆழ்ந்திருங்கள்!**

---

ஜான் டி. மோரிஸின் *இயேசு யார்?* © 2025 என்னும் படைப்பு ஆக்ட்ஸ் ஒன் எய்ட் நிறுவனத்தால் வெளியிடப்பட்டிருக்கிறது. இதனை எவ்விதத்திலும் மாற்றாமல் அதன் விசுவாச அறிக்கையோடு கூட இலவசமாக அச்சிடலாம், பிரதி எடுக்கலாம், அஞ்சல், மின்னஞ்சல் அல்லது செய்திகளில் பயன்படுத்திக் கொள்ளலாம். முதல் பக்கத்தின் துவக்கத்தில் உங்கள் ஊழியம் அல்லது சபையின் பெயர் அல்லது சின்னத்தையும், இரண்டாம் பக்கத்தின் அடிப்பகுதியில் உள்ள கோட்டிற்கு மேல் உங்கள் முகவரியையும் அச்சிட்டுக் கொள்ளலாம். ஜீசஸ் 316 முற்றிலும் வேதாகமத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டது. எல்லோரும் இயேசுவை விசுவாசிக்கவும், பின்னர் அவருடைய சீஷர்களாக வளரவும் உதவுவதே இதன் நோக்கம். Hello@Mail316.org என்ற மின்னஞ்சல் முகவரியில் ஆக்ட்ஸ் ஒன் எய்ட் நிறுவனத்திற்கு மின்னஞ்சல் அனுப்பலாம். ஆங்கிலமல்லாத மற்ற மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்து உதவியவர்கள் www.ChristianLingua.com. *இயேசு யார்?* www.Jesus316.org என்ற வலைதளத்தில் 48 மொழிகளில் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. ஆங்கில பதிப்பின் வேதவசன மேற்கோள்கள் த லாக்மன் ஃபவுன்டேஷன்'ஸ் நியூ அமெரிக்கன் ஸ்டான்டர்ட் பைபிள் 1995-லிருந்து கொடுக்கப்பட்டுள்ளன. இந்த மொழிபெயர்ப்பின் வேதவசன மேற்கோள்கள் தமிழி பரிசுத்த வேதாகமத்திலிருந்து (பழைய பதிப்பு) எடுக்கப்பட்டுள்ளன.